**ஹொரண நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**
---------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**
---------------------------

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**
------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**
---------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரண நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**
-------------------------------------------------------------------

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**
-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 07 இருப்பு விடயங்களின் பெறுமதியான ரூபா 12,731 தொகை குறைத்து ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 94,965 பெறுமதியான சொத்துக்கள் நிலையான சொத்தாகக் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்பு கணக்கு என்பன ரூபா 94,965 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குரிய மரங்கள் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் 47 அலகுகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 05 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதிசேர் வரிப் பெறுமதி நிலையான சொத்துக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துக் கணக்கின் மீதி ரூபா 124,204 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 5,938,125 பெறுமதியான சொத்துக்கள், நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக் கணக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கும் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களுக்காக கிடைத்த ரூபா 254,734 தொகையான கழிவு, பெறப்பட்ட கழிவாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கொடுத்த கழிவாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நூலகப்

புத்தகக் கணக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கும் ரூபா 254,734 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் செலவினமும் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) நூலகப் புத்தகங்களை அகற்றும் பெறுமதியான ரூபா 11,099 மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) பொழிப்பு வருமானப் பதிவேட்டின் பிரகாரம் கைத்தொழில் கணக்கில் நவம்பர் மாத பற்றுச்சீட்டு இலக்கம் 28608 இன் கீழ் கிடைத்த ரூபா 953,418 பெறுமதிக்குரிய மூலதனப் பெறுவனவுகள் கணக்கில் செலவு வைத்தமையின் காரணமாக, மீளாய்வாண்டின் மூலதனப் பெறுவனவுகள் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ஊழியர் கடன் பெறுவனவுகள் ரூபா 3,855 இனால் அதிகரித்து பதியப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் கணக்கின் மீதி அப் பெறுமானத்தால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மானியம் மற்றும் பங்களிப்பு செலவினத்தின் கீழ் (1-470) ரூபா 7,200 செலுத்த வேண்டிய செலவினமாக செலவினக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தும் கடன்கொடுத்தோர் கணக்கு அப்பெறுமானத்தால் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டில் மூலதன மானியப் பெறுவனவு ரூபா 370,719 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) உள்ளூராட்சி நிறுவனங்களில் கணக்கு வைக்கும் நடைமுறைகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் கணக்கு மீதியும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மீதியும் சமமாக இருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அந்த இரண்டு கணக்குகளுக்கிடையே ரூபா 330,584 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) அலுவலக காகிதாதிகளின் இருப்பு புத்தகத்திற்கும் களஞ்சிய பதிவேடுகளுக்கும் இடையே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,731 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நானாவித கடன்கொடுத்தோர் கணக்கு, கடை வாடகை மற்றும் முற் செலுத்துகை மீதிகளின் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 58,482,351 ஆகவும், பட்டோலையின் பிரகாரம் ரூபா 45,819,822 ஆகவும் இருந்தமையால் ரூபா 12,662,529 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 23,588,161 தொகையான 02 கணக்கு மீதிகளைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்**

**(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**

(i) நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் சில வருடங்களாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,040,049 தொகையான வைப்பு மீதியை இனங்கண்டு, தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 1645(அ), (ஈ) மற்றும் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் பொது 268 படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதிகளுடன் அந்தந்த மாதத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஓட்ட அட்டவணையும் மாதாந்த பொழிப்பும் அதன் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் நிதிப் பிரமாணம் 1647(அ) இன் பிரகாரம் வாகனங்களின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வொன்று நடாத்தப்பட வேண்டியிருந்ததுடன் உத்தியோகத்தரொருவரிடமிருந்து இன்னுமொருவருக்கு வாகனத்தின் பாதுகாப்பு கையளிக்கப்படும் சந்தர்ப்பத்தின் போது மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் வாகனம் தொடர்பாக அவ்வாறான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,034,684 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,172,065 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 9,537,659 நிலுவை வருமானம் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255) அதிகாரத்தின் 160, 165, 170 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஆதன வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,397,487 தொகையான நிலுவை ஆதனவரி மீதியில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 8,890,760 அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் காணப்பட்ட ரூபா 2,506,727 தொகையான மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியலிடல் ரூபா 14,775,674 ஆக

இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 2,303,646 அறவிடவேண்டியிருந்தது.

**2.2.3 கைத்தொழில் மற்றும் வியாபார வரி**

2014 ஆம் ஆண்டிற்கும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கும் உரிய நிலுவை கைத்தொழில் வரி ரூபா 23,500 தொகையையும், நிலுவை வியாபார வரி ரூபா 6,000 தொகையையும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 15,000 தொகையான நிலுவை வியாபார வரி மீதியையும் கணக்காய்வுத் திகதியான 2015 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வீட்டு வாடகை**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 6,455 தொகையான நிலுவை வீட்டு வாடகை மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கடை வாடகை**

அரசாங்க நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட கடை இலக்கம் 37 மற்றும் 38 என்பன 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி முதல் வாடகை உரித்து அகற்றப்பட்டிருந்த போதிலும், நிலுவை வாடகையான ரூபா 6,000 தொகை 2015 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 அறிவித்தல் பதாதை வருமானம்**

(அ) 2015 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் டிஜிட்டல் பதாதை அறிவித்தல் மற்றும் பெயர்ப் பதாதைக் கட்டணமாக ரூபா 4,025,000 வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 513,990 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 3,511,010 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(ஆ) இலங்கைக் குடியரசின் 2014 நவம்பர் 14 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் 11-378/3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் ஹொரண நகரசபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல், பெனர், அறிவித்தல் பதாதை, டிஜிட்டல் பதாதை கண்காட்சிக்காக அதில் காண்பிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்படவேண்டிய போதிலும் 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி ஹொரண – பாணத்துறை வீதிக்கு அருகாமையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக தெரிவுப் பரிசோதனையின் போது கட்டணம் அறவிடப்படாத 23 நிலையான அறிவித்தல் பதாதைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் அதன் மூலம் மீளாய்வாண்டிற்காக மாத்திரம் சபைக்கு கிடைக்கப்பெறாது போயிருந்த வருமானம் ரூபா 203,200 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வாகனக் கட்டுப்பாடு

(அ) 2012 ஆம் ஆண்டின் போது விபத்திற்குட்பட்டிருந்த தண்ணீர் பவுசரை பழுதுபார்ப்பதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ச.தொ.ச. மோட்டர்ஸ் மற்றும் பைபர் கிளாஸ் நிறுவனங்களுக்கு ரூபா 1,416,788 தொகை செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்த போதிலும், இந்த விபத்துத் தொடர்பாக காப்புறுதி இழப்பீடாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 929,321 தொகை மாத்திரமே கிடைத்திருந்தது. சபையினால் வாகனத்தின் மதிப்பீட்டு தொகையைவிடக் குறைவாக இந்த வாகனம் காப்புறுதி செய்யப்பட்டமை அதற்கான காரணமாக இருந்தது. அதன் பிரகாரம் காப்புறுதி நட்டஈட்டை விஞ்சி ரூபா 487,467 தொகையை சபை செலவிட்டிருந்தது

(ஆ) அவ்வாறே இந்த விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பரிசோதனை நடாத்தி நட்ட இழப்புத் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரைத் தீர்மானித்து இழப்பின் பெறுமதியை உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 01 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் வாாகனங்களின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட டயர் மற்றும் டியூப்களின் கணிசமான எண்ணிக்கையில் இடவசதிகள் போதாமையால் வெளியில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. டயர்களை மீள் நிரப்பியதன் பின்னர் பாவனைக்கு எடுப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 01 ஆந் திகதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2014 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் களஞ்சியப் பொறுப்பாளரிடம் காணப்பட்ட நிதிசார் பெறுமதியுடைய வியாபாரத் தளம் மற்றும் நிலங்களுக்காக பயன்பாட்டு அனுமதிப்பத்திரம் - B படிவத்தின் 25,000 அடியிதழ்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை நிதியத்திலிருந்து ரூபா 87,000 செலவில் சபையின் மூலம் தலைவர் மற்றும் நகரசபை உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டிருந்த 06 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பாகிஸ்தான் வகையில் 3 அங்குல GI குழாய் 1 என்பன சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் சபைக்குக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 03 நூலகங்களிலிருந்து வெளிவாசகர்களினால் வெளியே எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் கையளிக்கப்படாத ரூபா 7,537 தொகையான 34 புத்தகங்களின் பெறுமதியை மீள அறவிடுவதற்கோ அல்லது அந்தப் புத்தகங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களிடமிருந்து பங்களிப்புப் பணம் அரச சேவை சேமலாப நிதியச் செயலாளர் மற்றும் கணக்காளருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும், அவ்வாறில்லாமல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டமையின்

காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 51,234 தொகை உரிய நிதியத்திற்கு தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2015 இன் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்துவதற்காக ரூபா 2,500,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 02 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 ஆம் ஆண்டின் செலவினக் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்ட ரூபா 150,198 பெறுமதியுடைய கடன்கொடுத்தோரை 2016 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 159(ஊ) பிரிவின் பிரகாரம் ஏதாவது வருடமொன்றின் கூட்டுமொத்தம் ரூபா ஐயாயிரத்திற்கு மேற்படுமாயின் சமய, புண்ணிய கருமங்கள், கலாசார, களியாட்ட ரீதியான அல்லது கல்விசார் விடயங்கள் தொடர்பாகவும், (எ) பிரிவின் பிரகாரம் ஏதாவது வருடமொன்றில் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவிற்கு மேற்படும் வகையில் சபையினால் ஒதுக்கப்படுகின்ற பங்களிப்புப் பணம் மற்றும் பொது விழாக்கள் மற்றும் களியாட்ட செயற்பாடுகள், ஏதாவது நூலகங்களுக்கான நிதியுதவி அல்லது கல்விசார், களியாட்ட, புண்ணிய கருமங்கள் மற்றும் உதவி நிறுவனங்கள் அல்லது ஏதாவது சமயம்சார் நடவடிக்கைகளின் செலவினங்களுக்காக அமைச்சரின் எழுத்து மூல அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 76,982 செலவினமொன்று வெசக் பண்டிகைக்காகவும், ரூபா 210,000 தொகை நன்கொடையாகவும் வழங்கப்பட்டிருந்தன.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உலக வங்கி நிதியுதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படும் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 496,144 தொகையான செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், சபையில் எந்தவொரு கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்றும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. சபை அதிகாரப் பிரதேசத்தால் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையில் மொறட்டுவ மாநாகர சபைக்கு 04 மாதங்களுக்காக ரூபா 214,971 தொகையும், தனியார் நிறுவனமொன்றிற்கு 2½ மாதங்களுக்காக ரூபா 563,750 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. நகர அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே சனத்தொகை குறைந்த பிரதேசங்கள் அதிகமாகக் காணப்படுகின்ற (சபை அதிகாரப் பிரதேசத்திலிருந்து வெளியில் இருந்த போதிலும்) இந்த சபைக்காக கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்றை செயற்படுத்த முடியுமாக இருந்தது.

(ஆ) அவ்வாறே 2014 ஆம் ஆண்டின் கொள்வனவு செய்யப்பட்ட 80 கூட்டுப்பசளை பாத்திரங்கள் கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 01 ஆந் திகதி வரையில் உரிய பணிகளுக்காக 05 பாத்திரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 76 பாத்திரங்களும் எவ்வித பயன்பாடுமின்றி சபையில் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்த 11 லீற்றருடைய 1200 பிளாஸ்டிக் பாத்திரங்கள் வெளித்தரப்பினர்களுக்கு விநியோகிப்பதற்காக களஞ்சியத்திலிருந்து சுகாதாரப் பிரிவிற்கு 2015 ஆகஸ்ட் 20 ஆந்

திகதியே வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 01 வரையிலும் அதில் 396 பாத்திரங்கள் சுகாதாரப் பிரிவில் எஞ்சியிருந்தது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

**(அ) றோயல் கார்டின் பட்மிண்ரன் விளையாட்டரங்கு நிர்மாணம் - கிரயம் ரூபா 650,000**

இந்த நிர்மாணத்திற்கான மதிப்பீட்டின் விடய இலக்கம் 12 இன் கீழுள்ள வேலை விபரங்களின் படி நீரை வழிந்தோடச் செய்வதற்காக $2^1x2^1x2^1$ அளவில் கலி அமைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 1 அடி விட்டத்துடன் 6'' அளவில் ஆழத்துடன் ஒடுங்கிய வடிவிலான கலி அமைக்கப்பட்டமையால் மதிப்பீட்டு வேலை விபரங்களுக்கு இணங்காதிருந்தது.

**(ஆ) பொதுமக்கள் விளையாட்டு மைதானத்தின் விளையாட்டரங்கை திருத்தியமைத்தல்**

**மதிப்பீட்டுத் தொகை ரூபா 12,790,000**

(i) ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் 02 ஓய்வு அறைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது (அறை இலக்கம் 06) இரண்டு குளியலறைகளாக பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் அந்த குளியலறை இரண்டினதும் ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் சிவிலிங், மின்விசிறி என்பன பொருத்தப்பட்டிருந்தன. இந்த அறைகளின் இறுதி அளவிடை எடுத்தல் கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 01 வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், மதிப்பீட்டின் வேலை விடயங்களை மாற்றுவதற்குரிய ஆரம்ப மதிப்பீடு திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) விளையாட்டரங்கின் கூரை அமைக்கப்பட்ட இரும்புத் துண்டங்கள் (roof trusses) மற்றும் இரும்பு பலகைகளில் அனேகமான பகுதிகளில் துருப்பிடிக்காத நிறப்பூச்சுகள் பூசப்படாதிருந்ததுடன் மிகவும் மோசமாக துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

(iii) விளையாட்டரங்கின் கூரை மிகவும் உயரத்தில் காணப்பட்டமையின் காரணமாக விளையாட்டரங்களின் முன்பக்கத்தினாலும் மற்றைய இரு பக்கங்களினாலும் மழைநீர் விளையாட்டரங்கிற்குள் வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(இ) விளையாட்டரங்கின் முன்பக்க கதவுகளைப் பொருத்துதல்**

**மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 325,000**

(i) அலுமினியம் ரோலர் ஸ்ட்டர்ஸ் கதவுகள் பூட்டப்பட்டதன் பின்னர் மழைநீர் விளையாட்டரங்கிற்குள் கசிந்து காணப்பட்டது.

(ii) இந்த செயற்திட்டம் கல்ஏதடுகொட சனசமூக சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இதற்கான தொழில்நுட்ப அறிவு அச்சங்கத்திற்கு இல்லாதிருந்தமையும், அந்த தொழில்நுட்ப அறிவு வேறொரு தனியார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்டிருந்ததாகவும் அச் சங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) பொதுமக்கள் விளையாட்டு மைதானத்தின் பின்பக்கம் கம்பி வேலி அமைத்தல்**

**மதிப்பீட்டுத் தொகை ரூபா 250,000**

விளையாட்டு மைதானத்தை மேவுகை செய்யும் வகையில் கீழே குறிப்பிடப்படுகின்ற அளவுகளில் கம்பி வேலி அமைப்பதற்காக ரூபா 325,000 தொகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் மதிப்பீட்டில் 30 சதவீத அளவு மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கான காரண விடயங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| விடய இலக்கம் | விடயம் | மதிப்பிடப்பட்ட அலகு | அளவு (Qty) | உள்ளபடியாக நிறைவேற்றப்பட்ட அளவு (Qty) |
|---|---|---|---|---|
| 2 | முட் கம்பி வேலி | அடி | 5960 | 1901 |
| 3 | முன் தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் தூண் | எண்ணிக்கை | 106 | 34 |

இதன் பொருட்டு கம்பி வேலி தேவையாக இருந்த மொத்தப் பிரதேசத்தையும் மேவுகை செய்யும் வகையில் வேலி நிர்மாணிக்கப்படாமல் ஒரு பகுதிக்காக மாத்திரம் கம்பி வேலி நிர்மாணிக்கப்பட்டமையினால் கம்பி வேலி நிர்மாணிப்பதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், பரந்த வீச்சிலான பிரதேசமொன்று கம்பி வேலியின்றி பாதுகாப்பின்றியிருந்தமை 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(i) விளையாட்டு மைதானத்தின் தெற்குப் பக்கம் (வேலி நிர்மாணிக்கப்பட்ட பிரதேசம்) முழுமையாக நீரினால் நிரம்பியிருந்தமையால் சதுப்பு நிலமான நிலைக்கு உள்ளாகியிருந்தது. விளையாட்டு மைதானத்தின் தெற்குப் பக்கத்தில் அதிகமான காடுகள் வளர்ந்திருந்ததுடன் அப்பிரதேசத்தின் அனேக இடங்களுக்கு போக்குவரத்துச் செய்ய முடியாதிருந்தது.

(ii) பொருத்தப்பட்டுள்ள கொங்கிரீட் தூண்களின் சிலவற்றில் சில இடங்கள் உடைந்து காணப்பட்டதுடன் கம்பி சில இடங்களில் வெளிப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 3.6 விளைவற்ற சொத்துக்கள்

1993 நவம்பர் 18 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 15 ஆம் இலக்க திட்டமிடல் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 719675 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைக் கணக்கில் நிதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பயன்படுத்தக்கூடிய முறை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட கணக்கில் 2006 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 99,885 தொகையான மீதி அவ்வாறான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படாது 2016 யூன் 13 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.7 மனித வள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட 5 பதவிகளில் 27 வெற்றிடங்களும் 09 பதவிகளில் 38 மிகையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்